மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

<u>அசல் வழக்கு எண். 9 / 2015</u>

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 11.01.2024ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ) அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.வரதராஜன் (**Dw**1) | தொழில் | |
| த/பெ | திரு.சுப்பிரமணியன் | ஊர் | |
| வயது | | தாலூக்கா | பல்லடம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>11-01-2024 பிவா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

வழக்குரை சொத்து விபரத்தில் 2வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள புல எண்.650/2பி சொத்தானது என் தாத்தா எனக்கு ஏறப்டுத்திக்கொடுத்த உயில் ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் ஒரு ஏக்கர் 16 செண்ட். அந்த சொத்தில் 30 செண்ட் நிலத்தினை என் இரண்டாவது மனைவி மஞ்சுளா என்பவருக்கு நான் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரிதான், அந்த சொத்தை நான் சௌந்தரராஜன் என்பவரிடம் 2008ல் அடமானம் வைத்திருந்தேன். அதை என் 2வது மனைவி மீட்டுக் கொடுத்ததால் அதை அவருக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்தேன். மேற்படி சங்கதிகளை எனது எதிர்வாதத்திலும், எனக்குள்ள சொத்துக்கள் மற்றும் அதற்கான பொறுப்புகள் குறித்து நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் மற்றும் அதற்கான பொறுப்புகள் குறித்த ஆவணத்தில் நான்

எந்தெந்த வங்கியில் எவ்வளவு கடன் பெற்றுள்ளேன், எவ்வளவு திருப்பி செலுத்தியுள்ளேன் என்பது குறித்த விபரத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வாதசாஆ.5 செட்டில்மெண்ட் ஆவணம் நான் என் 2ம் மனைவிக்கு ஏற்படுத்திக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் என் 2ம் மனைவி நான் வைத்த அடமானத்தை நீக்கி கொடுத்ததால் அந்த ஆவணத்தை அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்ததாக அதில் வாசகங்கள் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்தைப் பொறுத்தும் இந்த வழக்கில் பற்றுகைக்காக வாதி பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு அதிலிருந்து தப்பிப்பதற்காக நான் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை என் 2ம் மனைவி பெயரில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு நான் என் 2ம் மனைவி பெயரில் ஏற்படுத்திக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் வழக்கு தாக்கல் செய்த தேதியிலேயே அதைப் பொறுத்து பற்றுகை ஏற்பட்டு விடும் என்றால் சரியல்ல. என் 2ம் மனைவிக்கு நான் ஏற்படுத்திக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் போக மீதமுள்ள சொத்துக்களை நானும் என் மனைவியும் கூட்டாக ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் நிறுவனத்தில் ரூ.9,50,000/-க்கு அடமானம் வைத்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படும் ஆவணம் அதற்கான ஸ்ரீராம் சிட்டியூனியன் பைனான்ஸ் நிறுவனம் வழங்கிய ரசீது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் **<u>வாதசாஆ.6</u>**. வாதசாஆ.5 ஆவணத்தின்படி நான் என் 2ம் மனைவிக்கு எழுதிக் கொடுத்த சொத்தை அவர் 15-3-2022ம் தேதியில் ஹரி நந்தினி பைனான்சில் அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கான அடமான பத்திரம் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான், அந்த அடமான

பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வாதசாஆ.7**. நான் என் 2ம் மனைவிக்கு எழுதிக் கொடுத்த 30 சென்ட் இடத்தில் தற்போது வீடு கட்டியுள்ளோம் என்றால் சரிதான். அந்த வீட்டின் விஸ்தீரணம் 1000 சதுரடி. அந்த வீட்டை 2019ல் கட்டினோம். தற்போது அந்த வீட்டின் மதிப்பு ரூ.60,00,000/- இருக்கும் என்றால் எனக்குத் தெரியாது. 30 சென்ட் போக மீதமுள்ள இடத்தில் தென்னை மரம் வைத்துள்ளோம் என்றால் சரிதான். எனக்கு உயில் சாசனம் மற்றும் பாக சாசனத்தின்படி பாத்தியப்பட்ட 4 ஏக்கர் 60 சென்ட் நிலததில் முழுவதும் தென்னை மரங்கள் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கான அடங்கல் விபரம் தாக்ல் செய்தால் உண்மை விபரம் தெரிந்து விடும் என்பதால் நான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மர வியாபாரம் செயவ்து சம்மந்தமாக எனக்கும், என் 2ம் மனைவிக்கும் உள்ள கூட்டு வங்கி கணக்கு விபரங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் தனியாக உள்ள வங்கி கணக்கு விபரம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தனியாக வங்கி கணக்கு இல்லை. சீட்டு பதிவாளரிடம் பதிவு செய்தால்தான் சீட்டு நடத்த முடியும் என்றால் சரியல்ல, பதிவு செய்யாமலும் நடத்தலாம். நான் சொல்வது போல் என் மனைவி ஐம்பது லட்சம், இருபத்தைந்து லட்ச ரூபாய்க்கு சீட்டு எதுவும் நடத்தி வரவில்லை என்றல் சரியல்ல. சண்முகவேல் என்ற பெயரில் வாதி சீட்டு நடத்தி வருகிறார். என் மகன் கார்த்திக் தற்போது பனியன் கம்பெனி நஷ்டமடைந்து விட்டதால் தற்சமயம் தொழில் எதுவும் செய்யாமல் இருந்து வருசிறார் என்றால் அவருக்கு கட்டிட வாடகை மட்டும் பல லட்சம் வருகிறது. எனக்கு முதல் மனைவி மூலம் பிறந்த மகளான சிந்துஜாவின் திருமண கடனையே இன்னும் வாதிகள் அடைக்க இயலாமல் உள்ளனர் என்றால் சரியல்ல. வாதி தற்போது தன்னைத்தானே பராமரித்து் ககொள்ள இயலாத நிலையில் உள்ளதால் அவருக்கு நான் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அவருக்கு நான் முன்பே

சொத்தை கொடுத்து விட்டேன். நான் என் பிள்ளைகளின் படிப்பிற்கோ, தொழிலுக்கோ, அவர்களின் திருமணத்திற்கோ, பராமரிப்பிற்கோ எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றும் என் மனைவிதான் அவர் பெற்றோர் வீட்டில் இருந்து பணம் பெற்று அதற்கான செலவுகளை செய்தார் என்றால் சரியல்ல, நான் கொடுத்த 12 தறிகளில் வாதிகளுக்கு வருமானம் வந்தது, அதன்மூலம்தான் இந்த செலவுகளை செய்து வந்தார். நான் முருகா பைனான்சில் பணம் கடனாகப் பெற்று அதை என்னால் கட்ட முடியாததால் வாதியின் தகப்பனார் அந்த கடனை கட்டியதால்தான் அந்த சொத்து வாதி பெயருக்கு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அது என்னை ஏமாற்றி எழுதி வாங்கியது. என்னை ஏமாற்றி சொத்தை எழுதி வாங்கியதாக எனது எதிர்வாத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு பாத்தியப்பட்ட சொத்து சம்மந்தப்பட்ட விபரங்களை நான் உண்மையாக நீதிமன்றத்திற்கு தெரிவிததிருக்க வேண்டும் என்றும் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் நான் முழுமையான விபரங்களை மறைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியபடி தாவா தீர்ப்பாகத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>. இல்லை.**

**இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.**

திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ)